**செய்தி வெளியீடு எண்: 301** **நாள்: 04.05.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 27–வது கூட்டம் மத்திய நிதி அமைச்சர் திரு. அருண் ஜெட்லி, அவர்கள் தலைமையில் இன்று (4.5.2018) காணொலி கலந்துரையாடல் மூலம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. D. ஜெயக்குமார் அவர்கள் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் முனைவர் T.V. சோமநாதன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஜி.எஸ்.டி. அமலாக்கத்தின் தொடர்ச்சியாக வரப்பெற்ற வருவாய் குறித்து விவாதிக்கப்பட்டது. 2018–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான நாடு முழுவதும் வரப்பெற்ற ஒட்டுமொத்த ஜி.எஸ்.டி. வருவாயானது ரூபாய் ஒரு இலட்சம் கோடியை எட்டியுள்ளது. அதே போல் தமிழ்நாட்டின் ஏப்ரல் மாதத்திற்கான எஸ்.ஜி.எஸ்.டி. வருவாயானது ரூபாய் இரண்டாயிரம் கோடியை தாண்டியுள்ளது. 2017–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான வருவாயுடன் ஒப்பிடுகையில் 21% கூடுதல் வருவாய் வளர்ச்சியாகும்.

இன்றையக் கூட்டத்தில் ஜி.எஸ்.டி. சட்டத்தின்கீழ் டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் முறையை ஊக்குவிக்கும் பொருட்டு சில சலுகைகள் வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், ஜி.எஸ்.டி. அமலாக்கத்திற்கான

தொழில்நுட்ப கட்டமைப்பை வழங்கி வரும் Goods and Services Tax Network-யினை முழுவதுமாக அரசுடமையாக்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

சர்க்கரை மீதான 5% ஜி.எஸ்.டி. வரிக்கு கூடுதலாக கிலோ ஒன்றுக்கு ரூ.3–க்கு மிகாமல் மேல்வரி விதிப்பதற்கான மத்திய அரசின் கருத்துருவும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த மேல் வரி விதிக்கும் முறையானது ஜி.எஸ்.டி. சட்டத்தின் கொள்கைக்கு மாறாக உள்ளதால் தமிழ்நாட்டிற்கு ஏற்புடையதாக இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் இன்றையக் கூட்டத்தில் ஆட்சேபணையினை தெரிவித்தார்கள்.

எத்தனால் மீதான வரியினை 18%–லிருந்து 12%–ஆக குறைப்பதற்கான கருத்துருவும் இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. எத்தனாலானது மனித நுகர்வுக்கான மதுபானங்கள் தயாரிப்பதற்கே அதிக அளவில் பயன்படுத்தப்படுவதாலும் மற்றும் இந்த வரிக் குறைப்பினால் மாநில அரசின் வருவாய் பாதிக்கக்கூடும் என்பதாலும் இதற்கு தமிழ்நாடு இசைவு அளிக்கவில்லை. எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் எத்தனால் மீதான வரியினை மட்டும் குறைப்பதற்கு மத்திய அரசால் மாற்று கருத்துரு வைக்கப்பட்டது. உரிய சட்ட பாதுகாப்பு வழங்கும்பட்சத்தில் இந்த மாற்று கருத்துருவிற்கு ஆட்சேபணை இல்லை என்று தமிழ்நாடு சார்பாக மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் இன்றையக் கூட்டத்தில் தெரிவித்தார்கள்.

வணிகர்கள் தாக்கல் செய்யும் மாதாந்திர விவர அறிக்கைகளை மேலும் எளிமைப்படுத்துவதற்கான கருத்துரு இன்றைய கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இது வரி செலுத்துவோர்க்கு பயனளிக்கக்கூடும் என்பதாலும், அரசுக்கு வர வேண்டிய வரி எந்தவிதத்திலும் பாதிக்காது என்பதாலும் இந்த புதிய விவர அறிக்கை தாக்கல் செய்யும் முறைக்கு தமிழ்நாடு ஆதரவு அளிப்பதாக இன்றையக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்நேர்வில் சிறு மற்றும் குறு வணிகர்களுக்கு இந்த புதிய விவர அறிக்கை மிகவும் எளிமையாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் திரு D.ஜெயக்குமார் அவர்கள் இன்றைய கூட்டத்தில் வலியுறுத்தினார்கள்.

**10.3.2018** அன்று டெல்லியில் நடைபெற்ற **26**–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் தமிழ்நாடு முன்வைத்து நிலுவையில் உள்ள வரிக்குறைப்பு மற்றும் வரி விலக்கு தொடர்பான கோரிக்கைகள் மீது விரைந்து முடிவெடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் வலியுறுத்தினார்கள். அதன் தொடர்ச்சியாக, இன்றையக் கூட்டத்திலும், நிலுவையிலுள்ள கோரிக்கைகளான வணிக சின்னம் இடப்பட்ட அல்லது இடப்படாத அனைத்து உணவு வகைகள்; வணிக சின்னமிடப்படாத பேக்கரி பொருட்கள்; பிஸ்கட்கள்; தீப்பெட்டிகள்; ஊறுகாய்; ஜவ்வரிசி; பம்பு செட்டுகள்; விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய இயந்திரங்கள் மற்றும் கருவிகள்; மீன்பிடிப்புக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள்; வெண்ணெய்; நெய்; சின்னமிடப்படாத சிப்ஸ், மிக்சர், முறுக்கு வகைகள் மற்றும் வத்தல்; ரஸ்க்; சின்னமிடப்படாத பானங்கள்; நன்னாரி சர்பத்; கற்பூரம்; மாற்றுத்திறனாளிகளால்

பயன்படுத்தப்படும் பொருட்கள்; ஜவுளி பொருட்கள் உற்பத்திக்கான இயந்திர பாகங்கள்; கொத்தமல்லி; காய்ந்த மிளகாய்; சுக்கு, மிளகு, மஞ்சள், மிளகாய், கடுகு கொண்டு தயாரிக்கப்படும் மசாலா பொருட்கள்; சிகைக்காய்; இஞ்சினியரிங் பாகங்கள் தொடர்பான சில்லரை வேலைகள்; டைரி, கடித உறைகள்; ஆடைகளில் பயன்படுத்தப்படும் ஜிப்பர்; காதி மற்றும் கிராமப்புற தொழில் பொருட்கள்; ஆடைகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் பிளீச் லிக்யூட்; கைத்தறி ஜவுளிகள்; பவானி தரைவிரிப்பு மற்றும் ஜமக்காளம்; கட்டுமான தொழிலுக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள்; மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்; கல்வி நிறுவனங்களால் outsource செய்யப்படும் சேவைகள்; வேப்ப உரம்; அரிசி தவிடு; சானிட்டரி நாப்கின்கள்; வெள்ளி கொலுசு, மெட்டி, அரைஞாண்கயிறு, தாலி; வெளிப்புற உணவு விநியோக சேவை; செங்கல் தயாரிப்பிற்கான இணக்கமுறை வரிசெலுத்தம்; பட்டு ஆடைகள், பட்டு நூல்; தேங்காய் நாரினால் செய்யப்பட்ட பொருட்கள்; மெல்லும் புகையிலை; விவசாயம் தொடர்பான சேவைகள்; அலுமினியம் கழிவுகள் மற்றும் அலுமினிய பொருட்கள்; சிட்பண்ட் தொடர்பான சேவைகள்; உணவகங்களுக்கான இணக்கமுறை வரிவிதிப்பு; கையால் நெய்யப்படாத பைகள்; கழிவு செய்யப்பட்ட டயர்கள் ஆகியவற்றின் மீதும் விரைந்து முடிவு எடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் இன்றையக் கூட்டத்தில் வலியுறுத்தினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**